உ

சிவமயம்



தம்பலகாமம் நாயன்மார்திடலைச் சேர்ந்த

அமரர்

# திரு.குருகுலபூபாலசிங்கம் குணரெட்ணம்

அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

09.06.2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
என்ற வள்ளுவன் வாய் மொழிக்கிணங்க
பெரியோர் சிறியோர் என்ற பேதம் இன்றி
நேர்மை நிதானம் கடைப்பிடித்து
கௌரவமாக வாழ்ந்து
எம்மை அன்பு, பாசம் காட்டி
வளர்த்து ஆலோசனைகள் கூறி
நல்ல ஸ்தானத்தில் எம்மை உயர்த்தி
ஆளாத்துயரில் ஆழ்த்தி பிரிந்து சென்ற
தலைவரின் பாதங்களுக்கு
இம்மலர் சமர்ப்பணம்

**மனைவி, மக்கள், மாமி, சகோதரர்கள்,**
**மைத்துனிகள், மைத்துனர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில்
10.05.1954

விண்ணில்
10.05.2015

அமரர்

# திரு. குருகுலபூபாலசிங்கம் குணரெட்ணம்

(கிராம சேவகர், நாயன்மார்திடல், தம்பலகாமம்)

## திதி நிர்ணயம்

சிந்தைநிறை மன்மதவருட சிறந்தமதி சித்திரையில்
வந்ததிதி அட்டமி தேய்பிறையில் சந்ததிசூழ்
குணரெட்ணம் எனும் பேராளன் புவிநீந்து
ஆதிகோணநாத பிரானடி இணைந்தார் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை

## தேவாரம்

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ் சேவடியென்மேல் வைத்தாய் நீயே
செவ்வாய் செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள் நான் மறைநூல் சகலமுங்கற்றோர்
சாட்டியக் குடியிருந்தருளும்
எங்கள் நாயகனே போற்றியே யிருக்கை
இறைவனே போற்றியே போற்றி

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரன்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உன்னை
என்றும் மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க என்றார்.

## திருப்புகழ்

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
யுனை நானினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குந் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைபாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பணமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்
## காப்பு
## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைப்போம்
துன்பம்போம் ! நெஞ்சிற்
பதிப்போர்க்கு செல்வம்
பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலருள்
கந்த சஷ்டி கவந்த தனை

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் மன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலோலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வரு!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரவண நிற நிற நிறென
நிபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த வழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் செளவும்
உய்யொளி செளவும் உயிரையுங் கிலியும்
கிலியுங் செளவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவகுகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறி நெற்றியில்நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத்(து)
அழகிய மார்பில்
பலபூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்த
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றனை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினை காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருவேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க ·
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும்சண் டாளர்களும்
என்பெயர் சொல்லவும்இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில்அரும் பாவைகளும்
பூனை மயிரும்பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும்நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனேபலகல சத்துடன்
மனையிற் புதைத்தவஞ்சனை தனையும்
ஒட்டியப்பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டுக் கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேவலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியம் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள்கடுந்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுஉ லகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபுர பவனே! பவனொளி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாகஆடினேன்
நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரட்சிஅன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்!
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க வறுமைகள் நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்மென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷடி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்த நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்த்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்குவிருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்வியதேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேச்சரப் பதிகம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகற் பிளவும்
அளப்பெருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடைமுடி யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச்- சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பரிந்து நன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லைக் கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறிய லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும் உடனாகித்
துன்றுமொண் பெளவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொன்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் இலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழ் ஆர்மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சரிதம்

பச்சைப் பசேலென்ற வயல்நிலம்
பாருக்குச் சோறளிக்கும் விவசாயம்
வானுயர்ந்த தென்னை மரங்கள்
மங்கள முக்கனியாம் மா பலா வாழை
குறைவில்லா பால் தரும் பசு எருமைகளும்
அல்லல் பிறவியறுக்கும் ஆதிகோணநாதரின் ஆலயமும்
அறியாமை நீங்கக் கல்வியூட்டும் ஆதிகோண நாயகர் வித்தியாலமும்
சிறப்பான இத்தனையும் சேர்ந்த இடம்
மருத நிலமாம் தம்பலகாமம் பதி
இப்பதியின் ஓரிடமாம் வர்ணமேட்டுத்திடலில்
குருகுலபூபாலசிங்கம் பொன்னம்மா தம்பதியர்க்கு
இரண்டாவது செல்வ மகனாய்
பார் போற்றும் வண்ணமாய் வந்துதித்தார் குணரெட்ணம்
பெற்றவளை முழுமையாகப் பார்க்கு முன்பே
பிஞ்சாய்ப் பேதலித்துப் பரிதவித்தார் அவள் இழப்பால்
பேரன் பேத்தி அன்பால் அணைத்தெடுக்க
அவர்கள் முகம் பார்த்தே அகமகிழ்ந்தார்
உன் பால் முகம் பார்த்து மகிழ்ந்தே
தாய் இல்லாக் குறை போக்க எண்ணி
அண்ணராம் திலகரெட்ணம் தம்பியாம் உன்னரதும்
துயர் நீங்க எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையாய் அணைத்தெடுத்து நிலாச்சோறூட்டி
பாசமாய்க் குழந்தைகள் இருவரையும்
பண்பாளர்களாக்க எண்ணி
தம்பலகாமம் அரசினர் பாடசாலைதனிலே
பள்ளிவரை தேடி பாங்காய்ச் சேர்த்தனரே
அண்ணனின் பாதையிலே தம்பியாய் நீயும்
திருமலை இந்துக்கல்லூரியிலே விரைவாய்ச் சேர்ந்து
கல்வியிலே நாட்டமும் பக்தியும் கூடி
சாதனை செய்து உயர்ந்திட விழைந்தீர்
சின்னம்மா வழி இரத்தினங்களாய்
செல்வரட்ணம், நவரெட்ணம், உடன்
கமலாதேவி, மங்கையற்கரசி, விஜயலட்சுமி
ஈறாய் ஜெயமணியும்
உன்னுடன் சகோதரராய் இணைந்தனரே
விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டியும்
கோயிற் தொழும்பிலும் தன்னை இணைத்தே
காளைப்பருவம் கூடிவரவே கல்வியில் உயர்ந்தே
பேரனும் பேத்தியும் அகமகிழ்ந்திடவே
சிறப்புடன் வாழ்ந்து பெருமிதம் கண்டீர்
பேரன் பேத்தி பார் நீத்த பின்
உடன் பிறந்த அண்ணனதும் மைத்துனியினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்திலும் பாதுகாப்பிலும் - உன்
இளமைக் காலத்தை இன்புடன் கழித்தீர்
கோணேசர் ஆலய கதிர்காம சுவாமி திருவிழாவை
அண்ணனோடு இணைந்து அழகுறச் செய்தீர்
இளமைக் காலம் செழிப்புற அமையவே
ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து ஒன்றில்
சின்னராசா தெய்வநாயகி பெற்றெடுத்த
தாய்மாமன்மகள் ரதியைக் கரம் பற்றி
இல்லற வாழ்வை இனிதே கழித்தீர்
மனைவிக்கேற்ற கணவனாய் வாழ்ந்து
இல்லறம் பெருக நல்லறம் கண்டு
வாழ்வும் வளமாய் அமைந்திடும் வேளை
செல்வ மக்களாய் சிவச்செல்வி, டினேஸ்குமார்
ரஜிந்தனுடன் சயந்தனையும்
வாரிசாய்ப் பெற்று ஆனந்தம் கண்டாலும்
ஏக மகளை இடையில் இழந்து
ஏக்கத்தில் பரிதவித்தீர்
1994ல் கிராம சேவகனாய்ப் பதவி பெற்று
முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், புதுக்குடியிருப்பு உடனே
ஈச்சந்தீவு வரை போர்க்காலத்தில் கூட
போராடிச் சேவை செய்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையோடு கூடியே விவசாயம் செய்து
சிறந்த விவசாயி எனப் பெயரையும் பெற்றீர்
எண்ணில்லா தேட்டங்கள் தேடியே சேர்த்தீர்
எண்ணி அழுகின்ற உறவினரையும் பெற்றீர்
சிரிக்க வைக்கும் உன் பகிடி
சிந்தையில் என்றும் நிலைத்திருக்கும்
நோயோடு சில நாள் நோவுற்றாலும்
நோகாதது போல வாழ்ந்ததுமேனோ
காலனும் விரைவாய்த் தேடி வரவே
இதயத்து வலியால் ஒருகணம் துடித்தே
சங்கரன் அடியில் சங்கமமானாய்
சங்கமமான செய்தி கேட்டு
உதிக்க மறந்த சூரியனாய்
ஆர்ப்பரிக்க மறந்த அலைகடலாய்
பறக்க மறந்த பறவைகளாய்
துடுப்பை இழந்த படகைப் போல
பரிதவிக்கின்றோம் நாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே சென்றீர்

உன்னைக் கணவனாய்க் கண்ட
காலம் முதலாய் குறையேது கண்டேன்
எங்கு சென்றாலும் என்னுடன் நீயும்
கூடவே வந்து காத்திருப்பாயே
மின்னல் தோன்றி மறையுமுன்னே
எங்கு சென்று மறைந்து போனீர்
மனைவியை பிரிந்து மக்களைப் பிரிந்தே
சொல்லாமல் சென்ற மாயம் என்ன
காணுமிடமெல்லாம் உருவம் வாட்டிட
கனவாய்ப் புயலாய் எங்கு சென்றீர்
கோயில் திருவிழா நெருங்கிடும் வேளை
பெரும் துயர்தந்தே பிரிந்ததும் ஏனோ
நானும் நீயும் சுற்றமும் சூழ
மெசினில் ஏறி கோயில், தீர்த்தம்
சென்ற நாள் இனி வருமோ ஐயா
எண்ணித் தவிக்கின்றேன் உன் செயல்களை
வாழ்க்கைச் சுழலில் புகலிடம் தந்தே
சிறகிழந்த வாழ்வைத் தந்ததுமேனோ
எத்தனை கோடி செல்வங்கள் கிட்டினும்
உன்னைப் போல் செல்வம் கிட்டுமா எனக்கு
வாழ்நாள் உள்ளவரை உன் நினைவினை
மீட்டே காலத்தைக் கழிப்பேன்.

**அன்பு மனைவி**
**ரதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் தேடுகின்றோம்

நீங்கா நினைவை எமக்குத் தந்தே
எங்கு சென்றாயோ எம் அன்புத் தந்தையே
அன்புச் சிறையிலே எம்மைப் பூட்டியே
ஆசை வார்த்தைகள் கூறி நிற்பீர்
துயருடன் நாம் நின்ற போது எப்போதும்
அறிவுரை கூறி பாசம் பொழிந்தீர்
கடல் கடந்த நாட்டில் இருந்ததால் நானும்
உன் உருவைக் கூட காணவில்லையப்பா
உன்னை நினைத்து நிதம் அழுகிறேனப்பா
உன் அருமை இப்போது தான் தெரிகிறதப்பா
உயர் கல்வி கற்று உன்முன் நிற்கவே
நானும் உன்னிப்பாகக் கற்கும் வேளை
உன்னை இழந்து தவிக்கின்றேன் அப்பா
தொழில் நிமித்தம் பிந்தி வரும் வேளையிலே
நீ தவிக்கும் தவிப்பு
எனக்குத் தான் தெரியுமப்பா
மக்களைப் பெற்ற மகராசான் ஐயா
எம் மங்கலம் காணாமல் மறைந்ததுமேனோ
அப்பா! அப்பா! பரிதவிக்கின்றோம் அப்பா

மகன்மார் :-

டினேஸ்குமார்
ரஜிந்தன்
சஜந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி எங்கு காண்பேன் தம்பி

தாயின்றித் தம்பியைக் கண்டேன்
தாயின் துயரம் போக்கியே நின்றேன்
இருவரும் ஒன்றாய் திருமலை சென்றே
இந்துக் கல்லூரியில் பாடம் கற்றோம்
என்னுடைய உடையைக் கண்டால் நீயும்
உனக்கும் அதுபோல் வேண்டுமென்பாய்
தந்தையாய் நின்றே பணிவிடை செய்தேன்
தாயாய் இருந்து குறை நீக்கி மகிழ்ந்தேன்
கிராம சேவகனாய் உன் உயர்வைக் கண்டு
எல்லையில்லா ஆனந்தம் கொண்டேன் நான்
திருவிழா வேளையில் பங்கு கொள்வாய்
அண்ணனைத் தேடியே திருமலை வருவாய்
என் பிள்ளைகள் மீதே கருணையும் கொண்டாய்
பேரப் பிள்ளைகள் மீதே அன்பையும் பொழிவாய்
இலக்கியத் தம்பியாய் என்னிடம் சேர்ந்தாய்
என்னைப் பிரிந்து சென்றதுமேனோ
என் பிறவியை இழந்து பரிதவிக்கின்றேன்
தனியனாய் இருந்து தவிக்கின்றேன்
உன் நினைவுகளுடனே காலம் கழிப்பேன்
மலர்களைத் தூவி சமர்ப்பணம் செய்வேன்

அன்பு அண்ணன்
திலகரெட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும் துயரடைந்தேன்....

வாழும் காலம் இருக்கின்ற போதே
வாட்டிய துயரைத் தந்ததுமேனோ
தாயும், தந்தையுமாய் உமக்கிருந்தோமே
மைத்துனியாய் எண்ணாமல் நாளும்
தாயைப் போல் பாசம் பொழிந்தீர்
"என்ன சொல்றீங்க" என்று அடிக்கடி கூறும் வார்த்தை
என் அடிமனதில் என்றும் ஒலிக்குதையா
கடல் கடந்து சென்றாலும் அத்தான்
உங்களைக் கணமேனும் மறப்பதில்லை
தந்தையை இழந்து தவிக்கையிலே அத்தான்
தந்தையின் கடமையினை தவறாமல் செய்தீர்
பெண் பிள்ளை இல்லாக் குறை போக்க
என் பிள்ளை மீது பாசம் பொழிந்தீர்
பூப்புனித நீராட்டு விழாக் காண எதிர்பார்த்துக்
காத்திருக்கும் வேளையிலே
காலன் உன்னைக் கவர்ந்து விட்டானே
அத்தான் அத்தான் சென்று கலங்குகின்றேன் ஐயா உன் பிரிவால்
சொல்லாமல் கொள்ளாமல் விரைந்து சென்றதேனோ
ஆத்மா சாந்தி பெற நாளும்
மலர் தூவித் துதிக்கின்றோம்

**அன்பு மச்சாள்மார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும் துயர் தாங்குமோ உள்ளம் ...

ஒரு வயிற்றில் பிறக்காத சோதரனே
பிரிவு கேட்டுப் பதறிப் போனோம்
பணிபடர் நாட்டில் வாழ்ந்திருந்தாலும்
உறவை நினைத்தே பெருமிதம் கொண்டோம்.
விரைவாய் மறைவாய் என நினைத்ததுமில்லை
இளமைக் காலத்தை மறந்ததுமில்லை
உறவுகளுக்காய் காட்டிய கருணையுமெங்கே
இளவயதில் காலனும் உன்னிடம் வந்ததேனோ
ஆத்மா சாந்தி பெற தினமும் துதிக்கின்றோம்

அன்புச் சகோதரர்கள்

செல்வரெட்ணம் (பிரான்ஸ்)
கமலாதேவி
விஜயலெட்சுமி
ஜெயமணி (லண்டன்)
மங்கையர்க்கரசி (பிரான்ஸ்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே காண்பேன்

பெற்ற மகனாய் என்னை தினமும்
கற்ற வித்தைகள் கவனமாய்ச் சொல்வாய்
குடும்ப உறவைக் குலையாமல் பேணி
மாமியாய் நினைத்தே மரியாதை செய்வாய்
என் இரு பிள்ளைகளையும் இழந்த வேளையிலே
உன் முகத்தால் என் துன்பம் மறந்தேன்
வாழும் வயதில் கணவனை இழந்தேன்
வன்செயலில் என் இரு பிள்ளைகளையும் இழந்தேன்
இன்று என் அருமை மருமகனையும் இழந்தேன்
என்னைப் போல் பாவி யாருமில்லை ஐயா
வகை வகையாய் சமைத்து வாய்க்கிதமாய் தந்தேன்
இனி யாருக்கு நான் சமைப்பேன் ஐயா
நீயிருக்கும் தைரியத்தில் இவ்வளவு நாள் வாழ்ந்தேத்
எனக்குப் பின் என் பிள்ளைகளுக்கு
துணையாக நீயிருப்பாய் என்றிருக்க
என்னைத் துணையாக்கி விட்டு
எங்கே சென்று மறைந்தாயோ
காலம் விரைவாய் அழித்திட்ட கொடுமை
உலகம் உள்ளவரை ஒருபோதும் மறவேன்
இறைவன் திருவடி ஆறுதல் பெறவே
பூக்களைச் சொரிந்தே நாளும்
தோத்திரம் பாடித் துதிக்கின்றேன்

அன்பு மாமி

## தேற்றம்

முன் செய்த பாவ புண்ணியங்கள் சாருமுறைப்படியே
மண்ணும் உலகில் பிறந்தே பிறப்பரிய மறைமொழியே
பொன்னாக்க வேண்டி குணரெட்ணம் அமரபதம் அடைந்தார்.
பின்னோக்கிலா மறமென்னாமலிந்தின்பம் பெற்றுய்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அர்ப்பணிப்பு மிகு சமூகசேவையாளர்.**
**அமரர். கு.குணரத்தினம் கிராமசேவையாளர்**

"தோன்றில் புகழோடுதோன்றுக". என்றவான்புகழ் வள்ளுவனின் வாக்கிற்கு அமைவாக வையகத்தில் வந்துதித்த அமரர்.குருகுலபூபாலசிங்கம் குணரத்தினம் அவர்கள் மக்கள் சேவையே மகேசன் சேவை என தனது வாழ்கையை வாழ்ந்து காட்டியவர்.அமரர் குணரத்தினம் அவர்களின் பேரனார் ஏரம்பு கணபதிப்பிள்ளை அவர்கள் தம்பலகாமம் ஆதிகோணநாதர் ஆலயத்தின் வளர்ச்சிக்காக தனது அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை வழங்கியவர். அதன் தொடர்ச்சியாக தம்பலகாமம் பிரதேசத்தின் சமூக, சமய வளர்ச்சியில் தனது காத்திரமான பங்களிப்பை அமரர்.கு.குணரத்தினம் அவர்கள் வழங்கியிருந்தமையை இவ்விடத்தில் ஞாபகப்படுத்துதல் சாலவும் பொருந்தும் என நினைக்கின்றேன். தனது ஆரம்பக் கல்வியை ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்ததுடன் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் தனது மேற்படிப்பையும் மேற் கொண்டார். கிராமசேவை அதிகாரியாக பதவியேற்று தம்பலகாமம், புதுக்குடியிருப்பு, முள்ளிப்பொத்தானை போன்ற பிரதேசங்களில் கடமையாற்றிய இவர் இறுதியாக கிண்ணியா பிரதேச செயலகத்தில் உள்ள ஆலங்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தில் கிராம அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவர் கடமையாற்றியகாலங்களில் ஏற்பட்ட சவாலான சந்தர்ப்பங்களில் மிகத் துணிவுடனும் காருண்யத்துடனும் சேவையாற்றியமையை நாம் அறிவோம். மக்களால் விரும்பப்பட்ட ஒரு அதிகாரியாக தனது கடமையினை வினைத்திறனுள்ள வகையில் மேற்கொண்டார். ஓய்வு பெற்றதும் சமூக செயற்பாடுகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அன்னாரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். எமது பிரதேசத்தை வளமான பிரதேசமாகவும் மக்களை நல்லறிவு மற்றும் ஒழுக்கம் மிக்கவர்களாகவும் மாற்றுவதே அன்னாருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

பிரதேசசெயலாளரும்,உத்தியோகத்தர்களும்
பிரதேசசெயலகம்
தம்பலகாமம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதயத் தெய்வம் அமரர்.குருகுலபூபாலசிங்கம் குணரெட்ணம் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டவுடன் எமது இல்லத்திற்கு ஓடோடி வந்து எம்முடன் இணைந்து கொண்டவர்களுக்கும், வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிச் செய்தி அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி மடல் அளித்தவர்களுக்கும், மலர் வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும், உணவளித்த உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் மற்றும் மரணக்கிரியைகளைச் செவ்வனே ஆற்றி, எமது தந்தையின் ஆத்ம சாந்திக்காக அனைத்துக் கிரியைகளையும் சிறப்புறச் செய்து உதவிய பிராமணோத்தமர்களுக்கும் உதவியாளர்களுக்கும் இந்நூலை ஆக்க உதவியவர்களுக்கும் இந்நூலிற்கு ஆக்கம் தந்தருளிய பிரதேச செயலாளருக்கும் , உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உடல் உளரீதியில் பல்வேறு உதவிகளை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்



என்றும் அன்பு நிறை
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by:
SHAN PRINTERS (PVT) LTD
TRINCOMALEE.
077 7296061

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org